*2*

# தேவனுடன் எனது அன்றாட நடை

## ஆவிக்குரிய தன்மை (2)

*ஆவிக்குரிய தன்மையில் நாம் ஒரு "காளைச் சந்தையை"* [*பங்கு மார்க்கெட் என்ற பரிவர்த்தனை வர்த்தகத்தில் "காளைச் சந்தை"* - "bull market" *என்பது, ஏறுமுகமான, உற்சாகம் தருகிற வர்த்தகத்தைக் குறிக்கும் - மொ.ர்.*] *- ஆர்வம் மற்றும் நடவடிக்கைகளில் ஒரு உச்ச அளவை - காண்கின்றோம். பெரும்பாலும் இது மூடநம்பிக்கையாகவும் ஒன்றுக்கும் உதவாததாகவும் இருக்கிறது. ஆழ்ந்து அறியக் கூடிய ஆவிக்குரிய தன்மை என்பது இன்னுமொரு குழந்தைத்தனமான பொருளற்ற ஆர்வமாகி விடக் கூடாது.*

*முந்திய பாடத்தில், போலியான ஆவிக்குரிய தன்மை பற்றிய நமது கலந்துரையாடலின் தொடர்ச்சியாக, இப்போது நாம், இன்னும் எவையெல்லாம் ஆவிக்குரிய தன்மையல்ல என்று கவனிப்போம்:*

*3. இது அறியாமையாகவோ அல்லது மூட நம்பிக்கையாகவோ இருப்பதில்லை. இன்றைய நாட்களில் மக்கள் தங்கள் கண்களால் கேட்டு, தங்கள் உணர்வுகளால் சிந்திக்கின்றார்கள். ஆவிக்குரிய தன்மை என்பது உணர்வுப்பூர்வமானதாக இருப்பதற்கு, அது பகுத்தறிவுள்ளதாக இருக்க வேண்டும். மக்கள், "நான் உணருகின்றேன், எனவே நான் நம்புகின்றேன்" என்று கூறுகின்றார்கள். "ஒவ்வொருவரும் கிறிஸ்தவராயிருக்கும்போது, எவரொருவரும் கிறிஸ்தவராயிருப்பதில்லை." மனங்களுக்கு உணவூட்டாமல் நீங்கள் "இருதயங்களைச் சூடாக்க" முடியாது. பரிசுத்தமாயிராமல் மகிழ்ச்சியாயிருக்க முயற்சி செய்யாதீர்கள்.*

*4. இது அறியப்படாத இறையுணர்வு அல்ல. சகோதரர்கள் எப்போதும், "ஆராயப்படாத, திரிபுள்ள, மற்றும் புரிந்து கொள்ளப்பட இயலாத" விஷயங்களுக்கு இரையாகின்றார்கள். ஆவிக்குரிய வகையின் பண்படாத உணவானது கிறிஸ்தவர்களைப் பக்குவப்படுத்த இயலாது. அமெரிக்காவின் முதல் பெண்மணியான நான்ஸி ரீகன், வெள்ளைமாளிகையில் மனோதத்துவ படிப்பாளர் ஒருவரை* (psychic) [*பணிக்கு*] *வைத்திருந்தார். மக்கள் தவறான எல்லா இடங்களிலும் ஆவிக்குரிய தன்மையைத் தேடிக் கொண்டு இருக்கின்றார்கள். உணர்வெழுச்சி என்பது "உள்ளானதாக" இருக்கிறது. மக்கள் தேவனை அல்ல ஆனால் "தேவனைப் பற்றிய அனுபவங்களையே" விரும்புகின்றார்கள். நாம், "ஆவியின் காலத்தை" கொண்டிருப்*

போமா? அல்லது “காலத்தின் ஆவியை” கொண்டிருப்போமா? ஒரு “சிறிது இயேசு,'' ஜென்னின் மெதுவான தொடுதல், ''புது - யுகத்தின்'' அணியொன்று, பெண்மைவாத ''அறிவு'' கொஞ்சம், படிகங்கள், வழிப்படுத்துதல்கள், மந்திரங்கள், குழு ஆய்வுக் கூட்டங்கள், குருக்கள்: இந்த அணுகுமுறைகள் ஆவிக்குரிய தன்மையை அல்ல, ஆனால் மூடநம்பிக்கையையே விளைவிக் கின்றன. ஆய்வு செய்யப்பட்டவர்களில் இருபது சகவிகித மக்கள், ஒரு ஆண்டிற்குள்ளாகவே தாங்கள் தேவனிடமிருந்து வெளிப்படுத்துதலைப் பெற்றுக் கொண்டதாகக் கருத்துக் கொண்டிருந்தார்கள். முப்பத்து மூன்று சதவிகிதத்தினர், தாங்கள் அறிவுக்கு அப்பாற்பட்ட அனுபவங்களைக் கொண்டிருந்ததாக உரிமைகோரினார்கள். “அனுபவம்” உள்ளது என்று நம்புகின்ற ஒரு மனிதருடன் செய்தித்தொடர்பு கொள்வதில், வேத வசனங்களைப் போதிக்கின்ற மனிதர் தோல்வியடைகின்றார்.

இப்போது நாம், ஆவிக்குரிய தன்மை என்றால் என்ன என்று கண்ணோக்குவோம்:

1. இது பகுத்தறிவுடையதாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது சத்தியத்தினால் தொடங்கி, சத்தியத்தினால் நிலைப்படுத்தப் படுவதாயிருக்க வேண்டும். மனச்சாட்சி என்பது உறுதிப்பாட்டின் மீது கட்டி எழுப்பப் படுகிறது; உறுதிப்பாடு என்பது சத்தியத்தின் மீது கட்டி எழுப்பப்படுகிறது. சத்தியம் இல்லாத நிலையில் ஆவிக்குரிய தன்மையானது “silliness gone to seed” “விதைக்குச் [தொடக்க நிலைக்குச்] சென்றுவிட்ட அற்பத்தனம்” என்பதாகி விடுகிறது. மனிதன் ஆவிக்குரியவனாக இருப்பதற்கு, சத்தியத்தைக் கேட்டு, சிந்தித்து, அதை அறிய வேண்டும். பகுத்தறிவு என்பது உணர்வுப்பூர்வமான விஷயத்திற்குத் திசை திருப்பும் கருவியாக (சுக்கானாக) உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது முதலில் பகுத்தறிவுக்குரியதாக உள்ளது.

2. இது வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. வேதாகம ரீதியாயிருங்கள். வேத வசனங்கள் இல்லாத நிலையில், தேவனுடனான ஆவிக்குரிய உறவுமுறையொன்று நிலவ இயலாது. ஆவிக்குரிய தன்மை என்பது “வசனத்தை மையமாகக் கொண்டதாக” இருக்க வேண்டியுள்ளது. தாவீது பாவம் செய்யாதபடிக்கு வசனத்தைத் தம் இருதயத்தில் காத்துக் கொண்டார் (சங். 119:11). இன்றைய நாட்களில் மக்கள், ''தேவன் என்னிடம் பேசினார்” என்று கூறுகின்றார்கள். இவர்கள் தீர்க்கதரிசிகளா? வேதாகமம் போதுமானதாக இருப்பதில்லையா? இவர்களுக்குக் கிடைத்த “வெளிப்பாடு” வேத வசனங்களுக்குச் சமமானதா? தேவன்மீது நம்பிக்கை வைத்தல் என்பது ஒரு உணர்வாக இராமல், ஒரு தீர்மானமாக உள்ளது. நாம் தேவன்மீது நம்பிக்கை வைக்க இயலுமா? நாம் வேதாகமத்தை நம்ப இயலுமா? நாம் சபையில் அன்புகூருகிறோமா? இந்தக் கேள்விகளுக்கான பதில்களே, நமது ஆவிக்குரிய தன்மையின் ஆழத்தையும் நிரந்தரத் தன்மையையும் தீர்மானிக்கும்.

உலகப் பிரகாரமான ஒரு குழுவுக்குப் பிரசங்கிக்கும்படி தேவன் ஆமோஸை அனுப்பினார். அவர்களின் அடிப்படைப் பிரச்சனை என்னவாக

*இருந்தது? நாட்டில் ஒரு பஞ்சம் - இது உணவுக்கான பஞ்சம் அல்ல, ஆனால் கர்த்தருடைய வசனத்தைக் கேட்க இயலாத பஞ்சமாகும் - இருந்தது (ஆமோ. 8:11) என்று ஆமோஸ் கூறினார். "எஜமானருடைய மேஜையில்" சகோதரர்கள் பட்டினி கிடக்கின்றார்கள். நாம் அறிவில்லாமையால் சங்காரமாகின்றோம் (ஓசி. 4:6). கிறிஸ்தவர்கள் வசனத்தினால் பிறக்கின்றார் கள்; அவர்கள் வசனத்தினால் வளர்கின்றார்கள்.*

*3. இது நாணயமானதாக/நேர்மையானதாக (அதிகாரத்துவமானதாக, வாய்மை வாய்ந்ததாக, உண்மையானதாக) உள்ளது. ஆராதனையைப் பற்றிய மாபெரும் சத்தியம் இயேசுவால், யாக்கோபின் கிணற்றருகில் போதிக்கப்பட்டது: "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" (யோவா. 4:24). சத்தியமே உண்மை என்று இவ்விடத் தில் கூறப்படுகிறது, ஆனால் "ஆவி" என்பது என்ன? நாணயம்/நேர்மை! இஸ்ரவேர்களின் பலிகளைக் குறித்து தேவன் "இளைத்தும் களைத்தும்" போனார் (ஏசா. 29:13ஐக் காணவும்). ஏன்? அந்த மக்கள் மாய்மாலக் காரர்களாய் இருந்தார்கள். அவர்கள் தேவனை வீணாக ஆராதித்தார்கள் (மத். 15:8, 9). இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் (மத். 5:8). ஆவிக்குரிய தன்மை என்பது சுத்தமான, நேர்மையான இருதயத் துடன் தொடங்குகிறது. நாம் நம்மை அல்ல, அவரையே தேடுகின்றோம். "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" (மத். 6:10; 26:42). தெய்வீகமா யிருக்க முயற்சி செய்யாதீர்கள்; அது உங்களால் முடியாது. மனிதராயிருங் கள். நீங்கள் நீங்களாகவே இருங்கள்; நீங்கள் வேறு எவராகவும் இருக்க இயலாது.*

*4. இது தாழ்மை என்பதாக உள்ளது. சார்ந்திருத்தல் என்பதே ஆவிக் குரிய தன்மையின் சாராம்சமாக உள்ளது. ஆவிக்குரிய தன்மையை அடைதல் என்பது ஏணியில் ஏறுதல் போன்றது என்று பலர் நினைக் கின்றார்கள். "ஆவிக்குரிய ஏணி" என்று ஒன்றும் இருப்பதில்லை. கல்வாரி யில் தேவன் ஏணியை அல்ல, சிலுவையையே வைத்தார்! "யாக்கோபின் ஏணியின்" மீது யாக்கோபு ஏறவில்லை; தூதர்கள் தாம் அதில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தார்கள் (ஆதி. 28:12). ஆவிக்குரிய தன்மைக்குச் சென்று சேரும் வழி என்பது, ஏறுமுகமானதாயிராமல் இறங்கு முகமானதாகவே உள்ளது. தாழ்மையை முதலில் கைக்கொள்ளுங்கள்! ஆவிக்குரிய தன்மை என்பது "சுயாதீனம்" அல்ல; ஆவிக்குரிய தன்மை என்பது உதவியற்ற நிலையாக (சார்ந்திருத்தலாக) உள்ளது. ஜெபம் என்பது நம்முடைய உதவியற்ற தன்மையின் கூப்பிடுதலாய் இருக்கிறது. ஆவிக்குரிய தன்மையில் மேட்டிமை கொண்டுள்ள எவரும் ஆவிக்குரியவர்கள் அல்ல. ஆவிக்குரிய தன்மை என்பது மதிநுட்பத்திற்கு எதிரானதாக இருப்பதில்லை. ஆவிக்குரிய தன்மை என்பது புத்தம்புதிய பிள்ளை விளையாட்டு அல்ல - இது மிகப் பழமையான சத்தியமாக உள்ளது.*

# "ஒரு விசுவாச நடை"

## எபிரெயர் 11[1]

*"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" (2 கொரி. 5:6).*

*தேவனுடனான நமது அன்றாட நடை, ஒரு "விசுவாச நடை" யாக உள்ளது. தேவன்மீது நமக்குள்ள விசுவாசத்தின் காரணமாக, நாம் தேவனுடன் நடக்கின்றோம். நாம் ஒரு வினாடி நேரம் [கூட] பூரணப்பட்டவர்களாயிருக்க முடியாது, ஆனால் ஒருவேளையில் நாம் ஒரு நாள் முழுவதும் விசுவாசமிக்கவர்களாயிருக்க முடியும். நாம் ஒவ்வொரு நாளும் விசுவாசமிக்கவர்களாயிருக்கும்போது, கிறிஸ்து எந்த நாளில் வருவார் என்பது நமக்கு ஒரு பொருட்டாயிராது. பரலோகத்தின் "புகழ்மிக்க அறை" என்பது வரலாற்றில் தங்கள் விசுவாசத்தை வாழ்ந்து காண்பித்த மாபெரும் பரிசுத்தவான்களைச் சித்தரிக்கிறது. காணக்கூடிய வகையில் இல்லாதவைகள் எவை என்று கவனியுங்கள் - மிக மேன்மையான மதிநுட்பம், சுய - மேன்மை, நேர்த்தியான நபர்த்துவம், திறமை, வெற்றி. நாம் வெற்றியாளர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் ஒருபோதும் கட்டளையிட்டதில்லை, ஆனால் அவர் நம்மிடத்தில் விசுவாசம் மிகுந்த தன்மையை வற்புறுத்தி வேண்டுகின்றார். தேவன் சமமான திறமைகளை வேண்டிக் கேட்பது இல்லை; அவர் சமஅளவான விசுவாசத்தைக் கூட வேண்டிக் கேட்பது இல்லை - விசுவாசமுடைமை மட்டுமே வேண்டும் என்கின்றார். இப்பொழுது நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கின்றீர்களா?*

### வாழ்க்கையே விசுவாசமாக உள்ளது

*விசுவாசம் என்பது புறக்கணிக்க முடியாத அளவுக்கு மிகவும் பெரியதாக உள்ளது. அது என்ன என்றும் அது என்ன செய்கிறது என்றும் நாம் அறிய வேண்டியது அவசியமாக உள்ளது. அதை நாம் அறிந்தாலும் அறியாவிட்டாலும், நாம் யாவருமே "நமது விசுவாசத்தினாலேயே நடக்கின்றோம்." ஒவ்வொரு சிந்தனையும், ஒவ்வொரு செயலும் நமது விசுவாசத்தைச் செயல்விளக்கப் படுத்துகின்றன. விசுவாசம் என்பது வாழ்வாக உள்ளது; வாழ்வு என்பது விசுவாசமாக உள்ளது. மனிதன் எதை நம்புகின்றானோ, அதுவாகவே இருக்கின்றான். மக்கள் சிலர், "நான் எனது விசுவாசத்திற்கு ஏற்றவாறு வாழ்வது இல்லை" என்று புலம்புகின்றார்கள். [அவ்வாறு இல்லை, ஆனால்] ஆம், நீங்கள் [உங்கள் விசுவாசத்திற்கு ஏற்றவாறுதான்] வாழ்கின்றீர்கள்! உங்கள் விசுவாசத்தில்தான் தோல்வியுள்ளது. நீங்கள் எவ்வாறு விசுவாசிக்கின்றீர்களோ, அவ்வாறே நீங்கள்*

வாழ்கின்றீர்கள். நாம் எதை விசுவாசிக்கின்றோம் என்பதே, நாம் எதைச் செய்கின்றோம் என்பதைத் தீர்மானிக்கிறது. உங்கள் நம்பிக்கைகள் உங்கள் நடத்தையைத் தீர்மானிக்காதிருந்தால், பின்பு எதற்கு நம்பிக்கைகளைக் கொண்டிருக்க வேண்டும்? விசுவாசம் என்பது, ''நம்புதலில் நம்பிக்கை கொள்ளுதல்'' என்பதல்ல. விசுவாசம் குறிக்கோள் ஒன்றைக் கொண்டுள்ளது. நீங்கள் யாரேனும் ஒருவரை அல்லது ஏதேனும் ஒன்றை நம்புகின்றீர்கள். ''நம்புதலில் நம்பிக்கை கொள்ளுதல்'' என்பது ஒரு மாயவித்தையாக, மூடநம்பிக்கையாக, அற்பத்தனமானதாக உள்ளது. விசுவாசம் மாத்திரமே ஒருவரை இரட்சிப்பதில்லை; தேவனே இரட்சிக்கின்றார்! விசுவாசம் தேவனில் நம்பிக்கை கொள்ளுகிறது.

மனிதனுடைய விசுவாசம் என்பது தேவனுடைய வல்லமையைக் காட்டிலும் பெரியது அல்ல. இன்றைய நாட்களில் நாம் நமது விசுவாசத்தின் குறிக்கோளாகிய கிறிஸ்துவைப் பற்றிப் பேசுவதற்கு மாறாக, நமது விசுவாசத்தைப் பற்றியே அதிகமாகப் பேசுகின்றோம். நீங்கள் உங்கள் விசுவாசத்தைப் பற்றித் தற்புகழ்ச்சி செய்வதில்லை. ஆனால் வல்லமையும் மகிமையும் தான் அந்தக் குறிக்கோளில் உள்ளன, விசுவாசி அல்ல. விசுவாசம் என்பது செயல்களின் தகுதியைக் காட்டிலும் அதிக தகுதி வாய்ந்தது அல்ல.

நாம் கூறுகின்ற அல்ல செய்கின்ற ஒவ்வொரு விஷயமும் நமது விசுவாசத்திலிருந்தே விளைகிறது. நாம் ஏன் சாலையில் ஒரு குறிப்பிட்ட பக்கத்தில் வண்டிகளை ஓட்டிச் செல்லுகின்றோம்? ஏனென்றால் நாம் சட்டத்தின் அதிகாரத்துவத்தையும் சாலையின் தவறான பக்கத்தில் ஓட்டிச் செல்லுதலில் உள்ள அபாயங்களையும் நம்புகின்றோம்! நாம் திறமை, கல்வி, ஆயத்தம், மக்கள், எதிர்காலம், பணம், வெற்றி, பிரபலமாகுதல், "அரசியல் ரீதியாக சரியான தன்மை,'' கலாச்சாரம், குடும்பம், அரசியல், உணவுக் கட்டுப்பாடுகள், உடற்பயிற்சி, நமது கொடி, வரலாறு, நற்பண்பு, நாணயம், நேர்மை மற்றும் பல விஷயங்களை நம்புகின்றோம். நாம் மருத்துவர்களை நம்புவதால்தான், தீவிர சிகிச்சைகளுக்கும் அறுவைச் சிகிச்சைகளுக்கும் நம்மை ஒப்புவிக்கின்றோம். நாம் விமான ஓட்டிகளை நம்புவதால்தான், ஆகாய விமானங்களில் பறக்கின்றோம்.

விசுவாசமே நாம் (விசேஷமாக இளைஞர்கள்) விந்தையான செயல்களைச் செய்வதற்குக் காரணமாகிறது. நீங்கள் ஏன் தலையை மொட்டையடித்து அட்டூழியமாக உடையணிந்து கொள்ளுகின்றீர்கள்? ஏனென்றால், அது ஏற்றுக் கொள்ளப்படுதல், வேடிக்கை, வெற்றி ஆகியவற்றைக் கொண்டு வரும் என்று நாம் நம்புகின்றோம். ஒத்தவயதுக் குழுவினரின் வலியுறுத்தம் வயது வந்தவர்களையும் பாதிக்கிறது. யாரோ ஒருவர், "நாம் பணத்தைச் செலவிடுகின்றோம் நாம் விரும்பவில்லையென்றால், நாம் பொருட்களை வாங்கவோ அல்லது மக்களை மதியீனர்களாக்கவோ அவசியம் இல்லை" என்று கவனித்துள்ளார். நாம் ஏன் கடன்படுகின்றோம்? ஏனென்றால் நாம் குறிப்பிட்ட சில உடைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று நம்புகின்றோம். வெளியில் பல வாரங்களாக, இரவும் பகலும் முகாமிடுதல், விளையாட்டு நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் அல்லது இசை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கு அனுமதிச் சீட்டுகளை வாங்குதல், ஆகியவற்றை ஏன் செய்ய

வேண்டும்? ஏனென்றால் நாம் நம்புகின்றோம். விசுவாசம் என்பது இங்கு பிரச்சனையல்ல, நாம் எல்லாருமே விசுவாசிக்கின்றோம் - ஆனால் யாரை விசுவாசிக்கின்றோம்? நீங்கள் எதில் விசுவாசம் கொண்டிருக்கின்றீர்கள்? நாம் எதை விசுவாசிக்கின்றோம் என்றும் ஏன் அதை விசுவாசிக்கின்றோம் என்றும் அறிவது அவசியமாக உள்ளது.

நாம் அறியாத விஷயங்களைப் பற்றி விசுவாசம் கொள்ளுகின்றோம். நீங்கள் அறியாதவை உங்களைக் கொல்லக்கூடும். நமது கலாச்சாரம் தனது கண்களால் கேட்டு தனது உணர்வுகளால் சிந்திக்கிறது. அரசியல் ரீதியான சரியான தன்மை நம்மைக் கட்டுப்படுத்துகிறது. வேத வசனங்கள், "ஆதலால் விசுவாசம் கேள்வினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17) என்று கூறுகின்றன. நமது விசுவாசம் தவறான ஆதார மூலங்களில் இருந்து வருவதாக உள்ளது: இது நமது மதியீனத்தின் பெரும்பாலானவற்றை விளக்கப்படுத்துகிறது.

தவறானவைகளாக உள்ளன என்று நாம் அறிந்துள்ள விஷயங்களில் நாம் நம்பிக்கை வைக்கின்றோம். எவரொருவரும் போதைப் பொருட்களை உடலில் ஏற்றிக் கொள்வதோ, அதிக எடையுள்ளதாயிருப்பதோ, அல்லது தமது மருத்துவரின் கட்டளைகளை மீறவோ முடிவது எப்படி? நாமே நமது மிகவும் மோசமான விரோதிகளாக இருக்கின்றோம். விசுவாசமிக்கவராக இருப்பதை விட வெறிமிக்கவராக இருப்பது என்பது மிகவும் சுலபமான தாக உள்ளது. விசுவாசம் உங்களை உயர்த்திப் பிடிக்கவில்லையென்றால், நீங்கள் அதைப் பற்றிக் கொண்டிருக்காதீர்கள். தாங்கள் துன்மார்க்கர்கள் என்று அறிந்த மக்களால் பரலோகம் நிரம்பி வழியும்; தாங்கள் நல்லவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்த மக்கள் பலரால் நரகம் நிரம்பி வழிந்திருக்கப் போகிறது.

இன்னும் நாம் அறியாதவைகளாக உள்ளன என்று நாம் அறிந்துள்ள தாக நினைக்கின்ற விஷயங்களில் நாம் நம்பிக்கை கொள்ளுகின்றோம். கலாச்சாரமானது, கடந்த காலத்தில் இருந்தவர்கள் ஒன்றையும் அறிந்திருக்க வில்லை என்றும், நிகழ்காலத்தில் இருக்கின்றவர்கள் எல்லாவற்றையும் அறிந்துள்ளார்கள் என்றும் கூறுகிறது. இதை விட முட்டாள்தனமாக நீங்கள் எப்படி இருக்க முடியும்? நமது கற்பனையான இருபதாம் நூற்றாண்டு அது தொடங்கியதைக் காட்டிலும் மிகவும் மோசமாக முடிவு பெற்றது. எல்லாவற்றிற்கும் பதில்கள் வைத்திருப்பதாக உரிமைகோருகின்றவர்கள் அவ்வாறு வைத்திருப்பதில்லை!

நாம் எதை நம்புகின்றோமோ, அதுவாகவே நாம் இருப்பதால், நாம் நம்புகின்றவை எவை என்பது பற்றி நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமது கலாச்சாரமானது, தூண்டுதலுணர்வு, மாயாவாதக் கொள்கை, உளவியல், உணர்வுகள், மற்றும் உடனடியாகக் குணமாகுதல் ஆகியவற்றின் மீது நம்பிக்கையாயுள்ளது. இந்தத் தீர்வுகள், மோசமான வற்றை மிகவும் மோசமாக்கி விடுகின்றன. "வெதுவெதுப்பான தெளிவற்ற தன்மை" என்பது நமது விசுவாசமாயிருக்கக் கூடாது. நம்மை நாமே அழித்துக் கொள்ளும் முயற்சியாகவே, நாம் நமது மனங்களுக்கு உணவூட்டாமல், நமது இருதயங்களை வெதுவெதுப்பாக்க முயற்சி

செய்கின்றோம். நாம் எதை நம்புகின்றோம் என்பதே பொருட்டாக உள்ளது. "ஒரு விஷயம் நல்லதென்று உணரப்பட்டால், அதைச் செய்யுங்கள்" என்பது சிறந்ததாக ஒலிக்கலாம், ஆனால் இது மோசமான விசுவாசமாக உள்ளது. நீங்கள் ஒருக்காலும் விசுவாசத்தை இழந்துபோவது இல்லை - நீங்கள் ஒரு விசுவாசத்திலிருந்து இன்னொரு விசுவாசத்திற்கு மாறுகின்றீர்கள், அவ்வளவே. விசுவாசம் என்பது இந்தப் பூமியின்மீது மிகவும் நடைமுறைக்குரிய விஷயமாக உள்ளது. விசுவாசம் என்பது வாழ்வுக்கு வழியாகவும், வாழ்வதற்கான வழியாகவும் உள்ளது. விசுவாசத்தின் மக்கள் தங்கள் விசுவாசத்தில் வாழ்கிறார்கள்.

ஆகையால், சத்தியத்தின்மீது மாபெரும் மதிப்பு வைக்கப்பட வேண்டும். "சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா. 8:32); "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்" (யோவா. 14:6). "முற்றான விசுவாசம்" என்று ஒன்றில்லை என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளுதல் என்பது தற்கொலை செய்து கொள்வதாகிறது! வாழ்வானது சத்தியத்தின் அடிப்படையில் அமைந்திருக்கவும் வாழப்படவும் வேண்டும். சத்தியத்திற்கான நாட்டம் என்பதே வாழ்வின் நோக்கமாக உள்ளது. "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே" (நீதி. 23:23). சமுதாயமானது சத்தியத்தினால் மாத்திரமே நிலவ முடியும். சத்தியமே நமது விசுவாசமாக இருக்க வேண்டும். "விசுவாசம் என்பது நீங்கள் உங்கள் முழு எடையையும் வைக்கக் கூடியதாக உள்ளது." சத்தியம் மாத்திரமே தகுதிப்படுத்துகிறது. விசுவாசம் என்பது "என் விசுவாசத்தில்" இருப்பதில்லை; விசுவாசம் என்பது சத்தியத்தில் உள்ளது. விசுவாசத்தின் சாரம்சமானது விசுவாசம்/சத்தியம் நிறைந்ததாயிருக்க வேண்டும். விசுவாசம் என்பது நமக்கு எல்லா பதில்களையும் தருவதில்லை; விசுவாசம் என்பது நம்மைப் பதில்கள் இன்றியே வாழ அனுமதிக்கிறது. விசுவாச வாழ்வு என்பது நித்திய ஜீவனை ஈட்டுவதில்லை; இதுவே நித்திய ஜீவனாக உள்ளது. ஒவ்வொரு நாளும் உங்களுக்கு நீங்களே சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். உங்கள் சொந்தப் பிரசங்கித்தலை விசுவாசியுங்கள்! விசுவாசமென்பது, நீங்கள் வேறொன்றையுமல்ல, தேவனையே விரும்புகின்றீர்கள், என்று அர்த்தப்படுத்துகிறது. விசுவாசத்தைப்போல வாழ்வை மாற்றுவதும் பரிசுத்தவான்களைப் பக்குவப்படுத்துவதும் வேறு ஒன்றுமில்லை. விசுவாசமின்றி நீங்கள் விசுவாசம் நிறைந்தவராயிருக்க முடியாது. அன்றாடம் விசுவாசமிக்கவர்களாக மாத்திரம் இருங்கள்.

சரியான வரிசை முறையில் நாம், உண்மைகள், விசுவாசம் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளோம். விசுவாசத்திற்கு முன்பு உண்மைகள் வருகின்றன, இவை உணர்வுகளுக்கு முன்பு வருகின்றன. உணர்வு என்பது அல்ல, ஆனால் உண்மை என்பதே விசுவாசத்தின் குறிக்கோளாக உள்ளது. நீங்கள் "விசுவாசத்திற்கான உங்கள் வழியை உணர்வது" இல்லை. விசுவாசமானது உண்மையின் மீது ஒரு கண் வைத்து இருக்கிறது. இது விசுவாசத்தைப் பாதுகாப்பாகக் காக்கிறது. விசுவாசமானது உணர்வின் மீது கவனம் செலுத்துவதற்காக உண்மையின் மீது

*வைத்த தனது கண்ணை எடுக்கிறபோது, விசுவாசம் உணர்வு ஆகிய இரண்டுமே துன்புறுகின்றன. குடும்பத்தின் மீது கவனம் செலுத்த வேண்டாம்; தேவன் மீது கவனம் செலுத்துங்கள்! குடும்பம் என்பது ஒருக்காலும் ஒரு விக்கிரகமாகி விடக் கூடாது. விசுவாசம் என்பது தேவனை அவரது வசனத்தில் எடுத்துக் கொள்ளுதலாக உள்ளது. நீங்கள் கொண்டுள்ளது ஆரோக்கியமான விசுவாசமா அல்லது ஆரோக்கியமற்ற விசுவாசமா?*

## விசுவாசம் நம்புகிறது

*விசுவாசம் என்பது மனம்சார்ந்த வகையில் ஏறுதலாக, முழு இருதயத்துடன் நம்புதலாக, முழுமையான கீழ்ப்படிதலாக உள்ளது. தேவன் எவ்வளவு மகிமையுள்ளவராகவும் நல்லவராகவும் இருக்கிறார் என்பதை நாம் உண்மையிலேயே உணர்ந்துகொண்டால், நாம் நமது வாழ்வையே அவருக்குக் கொடுப்போம். நாம் தேவனை உண்மையாகவே அறிந்திருந்தால், நாம் பாவம் செய்ய மாட்டோம். தேவன் தேவனாகவே இருக்கின்றார். மனிதன் அப்படியிருப்பதில்லை. உண்மை: தேவன் தேவனாக இருக்கிறார். விசுவாசம்: அவர் என் தேவனாக இருக்கிறார்! விசுவாசித்தலில் மனிதன் தனது மனிதத் தன்மையை உரிமைகோருகின்றான். மனிதன் இழந்து போகப்பட்டவனாக, உதவியற்றவனாக, நரகத்திற்குச் செல்லும்படி ஆக்கினைத் தீர்ப்பிடப்பட்டவனாக இருக்கின்றான். சார்ந்திருத்தல் என்பதே ஆவிக்குரிய தன்மையின் சாராம்சமாக உள்ளது. உதவி, இரட்சிப்பு என்பவைகளுக்கு மனிதன் தன்னை விட்டு வெளியே கண்ணோக்க வேண்டும். விசுவாசிப்பதற்கு மனிதன் தன்னையே தாழ்த்த வேண்டும். மனிதன் தன்னைத் தாழ்த்தாத வரையிலும், அவன் விசுவாசிக்க இயலாது. இதனால் தான் சில வேளைகளில், தேவனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனை நம்புவது என்பது மிகவும் கடினமாகிறது. கிறிஸ்துவுக்கு நம் வாழ்வை ஒப்புவித்தலைக் காட்டிலும், நாம் அறிகிற மற்றும் செய்கிற விஷயங்களை நம்புதல் என்பது சுலபமானதாக உள்ளது. விசுவாசம் என்பது தேவனுடனான ஒரு ஒப்பந்தமாக, ஒரு "வியாபார விஷயமாக" இருப்பது இல்லை. விசுவாசம் என்பது ஒப்புவித்தலாக உள்ளது. விசுவாசம் தன்னிலே எந்தத் தகுதியும் கொண்டிருப்பதில்லை. தேவனுக்கு மகிமை உண்டாவதாக!*

*விசுவாசம் கொண்டிருத்தல் என்பது, திரும்பி வருதலில் மட்டும் கருத்துணர்வை ஏற்படுத்தும் ஒரு முன்னேற்றத்தில் நம்பிக்கை கொள்ளுதல் என்று அர்த்தப்படுத்துகிறது. சிந்தித்துப் பாருங்கள்! (உயிர்த்து எழுதலின்) ஞாயிறன்று என்ன நடக்கும் என்று அப்போஸ்தலர்கள் அறிந்திருந்தால், (சிலுவையில் அறையப்பட்ட) வெள்ளிக்கிழமையை அவர்கள்* [நன்கு] *கையாண்டிருக்க முடியும். எதிர்காலத்திற்கான தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஈசாக்கின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதை ஆபிரகாம் அறிந்த காரணத்தினால், அவர் ஈசாக்கை, மனம் சார்ந்த வகையில் ஒப்புக்கொடுக்க முடிந்தது. ஆபிரகாம், "தேவனே நீரே அவனைக் கொல்லும்படி கூறினீர்.*

கீழ்ப்படிதல்தான் எனது வேலையாக உள்ளது. நான் உடனே அவனைக் கொல்லுவேன். அவனைத் திரும்பவும் [உயிருடன்] கொண்டுவருதல் உமது வேலையாகும்" என்று கூறியிருப்பார் என்பது நிச்சயம் (ஆதி. 22; எபி. 11). கடந்த காலத்தில் மக்கள் எவ்வளவு சிறியதாக விசுவாசம் கொண்டிருந் தார்கள் என்று காண்பது நமக்கு மிகவும் சுலபமாக உள்ளது. ஒரு ஆண்டுக்கு முன்பு நீங்கள் எதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்கள்? நம் சொந்த வாழ்வை நாம் பின்னோக்கிப் பார்க்கும்போது, நமது சிறுமைத்தன்மை, நமது விசுவாசக் குறைவு, நமது தோல்வி ஆகியவை பற்றி நாம் வெட்கப் படுவதில்லையா? நாம் என்னவாக இருக்கின்றோம் என்பது நாம் என்னவாக இருக்க வேண்டும் என்பதுடன் எப்போதும் யுத்தம் செய்வதாக உள்ளது. கிறிஸ்து, "அற்ப விசுவாசிகளே!" (மத். 6:30) என்று கூறுகின்றார், நாம் அவரிடம், "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ண வேண்டும்!" (லூக். 17:5) என்று கூறுகின்றோம். தேவன் நம்பப்படக் கூடுமா? நான் உண்மையிலேயே விசுவாசிக்கின்றேனா? விசுவாசமானது உலகத்திற்கு ஒரு நித்திய அம்சத்தைக் கொடுத்துள்ளது: ஒவ்வொரு கணமும் தேவனைப்பற்றி தேவனிடமிருந்து வெளிப்படுத்துதல் வருகிற கணமாயுள்ளது. நிகழ் காலத்தில் - விசுவாசத்தினால் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.

விசுவாசமானது சாத்தியமற்றவைகளில் நம்பிக்கை கொள்ளுகிறது. நமக்கு ஒரு எளிமையான, பிள்ளையினுடையது போன்ற விசுவாசம் தேவையாக உள்ளது. பிள்ளைகள் கிறிஸ்துமஸ் தாத்தாவை நம்புவதில் பிரச்சனை எதையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் சாத்தியமற்றவைகளை நம்புதல் என்பதில் குழந்தைத்தனம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதில்லை. குழந்தையைப் போலிருத்தல் என்பது, குழந்தைத் தனமாயிருத்தல் என்பதிலிருந்து மாறுபடுகிறது. தேவன் சாத்தியமானவை களின் தேவனாக மட்டுமின்றி, சாத்தியமற்றவைகளின் தேவனாகவும் இருக்கின்றார் (மத். 19:26). பேதுரு தண்ணீரின்மீது நடந்தார், ஆனால் பின்பு அவர் மூழ்கினார் (மத். 14:28-31). அவர் தாம் செய்து கொண்டிருந் ததைத் தாம் செய்ய முடியும் என்று விசுவாசிக்கவில்லை! தேவன் தமது வல்லமையை இழந்தது இல்லை. விசுவாசம் தோல்வியடைந்தது[ம்] இல்லை. பேதுரு தமது விசுவாசத்தைச் சந்தேகத்திற்கு மாற்றினார். [உடனே] அவர் மூழ்கினார்.

நாம் யாவரும் சாத்தியமற்றவற்றில் விசுவாசம் கொள்கின்றோம். நாம் வாழ்வில் விசுவாசம் கொள்கின்றோம். வாழ்வை விளக்கப்படுத்துங்கள். சமுத்திரங்கள் ஏன் பூமியின் அந்தப் பக்கத்தில் வீழ்வது இல்லை? தண்ணீர் தனது சுயமட்டத்தில் இருக்க நாடுகிறது. பூமியின் எந்தப் பகுதியில் நாம் நிற்பினும் (அது தென்துருவமாக இருப்பினும்), நாம் எப்பொழுதும் பூமியின் மீதுதான் நின்று கொண்டிருக்கின்றோம். பண்ணையில் உள்ள ஊமையான உயிரினம் எவ்வாறு முட்டையிடக் கூடும்? மனிதன் - மாபெரும் முயற்சியுடன் முட்டையொன்றை உற்பத்தி செய்தாலும், அதை அடைகாக்க முடியாது. ஒரு 747 போயிங் (ஜம்போ ஜெட்) விமானம் எப்படிப் பறக்கக் கூடும்? விதைகள் உயிர் வாழ்வதற்காக எப்படி இறக்கக் கூடும்? படைக்கின்ற நமது தேவன் உயிர்ப்பிக்கக் கூடியவராகவும்

*இருக்கின்றார்! விசுவாசத்தின் மக்கள், அதன் கட்டிடக் கலைஞரும், கட்டுகிறவருமாயிருக்கிற தேவனே கட்டியெழுப்பிய நகரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் (எபி. 11:10). விசுவாசத்துடன் கூடிய ஜெபம், மலைகளைப் பெயர்க்கக் கூடும் என்று இயேசு கூறினார் (மத். 17:20; 1 கொரி. 13:2). அவர் நினைவுச் சின்னமான ஒரு கவன ஈர்ப்புச் செயலுக் காகப் பரிந்துரைக்கவில்லை. ''மலைகளைப் பெயர்த்தல்'' என்பதல்ல, ஆனால் "என்னைப் பெயர்த்தல்" என்பதே இங்கு விஷயமாக உள்ளது. தேவன் என்னை மாற்றி, இரட்சித்து, பயன்படுத்த முடியும்!*

*விசுவாசம் என்பது இயல்பாகவே இடர்ப்பாடுகளை உள்ளடக்கி யிருக்கிறது. விசுவாசம் சோதிக்கப்படுதலை வேண்டுகிறது. நாம் நிகழ் காலத்தை மனம்போன போக்கில் பயன்படுத்துவதற்காக, எதிர்காலத்தை இடர்ப்பாட்டிற்குள்ளாக்குகின்றோம். ஆபிரகாம் ஈசாக்கைக் கையாளு வதற்கு முன்பாக, இஸ்மவேலை எவ்வாறு கையாள வேண்டும் என்று கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது! ''மன உறுதி'' அல்ல, ஆனால் ''விசுவாச வல்லமையே" நம்முடையதாக உள்ளது. தேவன் எல்லாவற்றையும் சிலுவை யில் துணிகரமாய் ஈடுபடுத்தினார்; நாம் எல்லாவற்றையும் விசுவாசத்தின் மூலமாகத் துணிகரமாய் ஈடுபடுத்துகின்றோம். இது, விசுவாசம் சந்தேகத்திற்கு அனுமதி அளிக்கிறது என்றும் அர்த்தப்படுகிறது. பரிசோதிக் கப்படாத விசுவாசம் தகுதியானதாக இருப்பதில்லை. பார்வையற்ற விசுவாசத்தைக் காட்டிலும் நேர்மையான சந்தேகத்தில் அதிகம் தேவபக்தி உள்ளது. யோவான் ஸ்நானன் தமது சந்தேகங்களைக் கொண்டிருந்தார் (மத். 11:3). நீங்கள் உங்கள் விசுவாசத்தைச் சந்தேகிக்கலாம், ஆனால் ஒருபோதும் உங்கள் சந்தேகங்களை விசுவாசிக்காதீர்கள்! ஆனால் அவிசுவாசம் என்பதே விசுவாசத்திற்கு எதிரானதாக உள்ளது, சந்தேகம் அல்ல. யூதர்கள் வனாந்தரத்தில் சந்தேகத்தினால் அழிக்கப்படவில்லை - அவர்கள் அவிசுவாசத்தினாலேயே அழிக்கப்பட்டார்கள் (எபி. 3:7-19). சிலவற்றை நாம் அறிவதற்காக எல்லாவற்றையும் அறிய வேண்டிய அவசியம் இல்லை.*

*யோவான் சந்தேகமுடையவராக இருந்தபோதும், அவரைப் பற்றி இயேசு, நம்புதற்கரிய கூற்று ஒன்றைக் கூறினார்: "... ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனு ம் எழும்பினதில்லை! ..." (மத். 11:7-11). தன்னைப் பற்றியே உறுதியாய் இருக்கக் கூடிய விசுவாசமானது விசுவாசமாயிராது போகலாம். தேவனின்றி வாழவும் இறக்கவும் முயற்சித்தல் என்பது ஆபத்துமிக்கதாக உள்ளது. நீங்கள் ஒன்றையும் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்தவில்லை யென்றால், எல்லாவற்றையும் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்துகின்றீர்கள். கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு நாளும் ''தங்கள் விசுவாசத்தை இடர்ப்பாட்டிற்கு உட்படுத்துகின்றார்கள்." விசுவாசம் என்பது பூரணப்பட்ட சூழ்நிலைகளுக் கான வாக்குத்தத்தம் அல்ல. தேவன் ஒருக்காலும் நம்மை அனாதரவாக விடாதவர் அல்லது நம்மைக் கைவிடாதவர் என்பதில்தான் விசுவாசம் உள்ளது (எபி. 13:5).*

## விசுவாசம் செயல்படுகிறது

வார்த்தையைப் பற்றிய எந்த விளக்கத்திலும், "விசுவாசம்" செயல் படுகிறது. நமது தேவன் செயல்படுகின்றார்: இயேசு நமது இரட்சகராயிருக்க வேண்டும் என்ற அவரது திட்டம் செயல்படுகிறது. ஆரோக்கியமான உபதேசம் செயல்படுகிறது. விசுவாசம் என்பது இயங்கக் கூடியதாக, கீழ்ப் படிதல் உள்ளதாக இருக்கிறது. "கிரியைகளில்லாத விசுவாசம் செத்த தாயிருக்கிறது" (யாக். 2:17-26). எபிரெயர் 11ன் உண்மையான கதாநாயகர் வேதாகமப் பாத்திரங்களில் ஒருவர் அல்ல - அதில் விசுவாசமே கதாநாயக அந்தஸ்தில் உள்ளது. விசுவாசம் வித்தியாசத்தை ஏற்படுத்தியது. நற்பண்பு அல்ல ஆனால் விசுவாசம் என்பதே பாவம் என்பதற்கு எதிர்ப் பொருளாக உள்ளது. அது போன்று, குற்றம் என்பதல்ல, ஆனால் அவிசுவாசம் என்பதுதான் பாவத்தின் சாராம்சமாக உள்ளது. இது கிறிஸ்தவரல்லாத மக்களை கிறிஸ்துவைப் போல் வாழச் செய்ய நாம் மேற்கொள்ளுகின்ற முயற்சிகளில் ஏற்படும் நமது தோல்விகளை விளக்கப்படுத்துகிறது. *விசுவாசம் செயல்படுகிறது!* நாம் "விசுவாசத்தைச் செயல்படுத்துகின்றவர் களாக" இருக்க வேண்டும் நாம் "நியாயப்பிரமாணத்தின் செயல்களை" அல்ல ஆனால் "விசுவாசத்தின் செயல்களை"யே செய்கின்றோம். ஒரு நபரில் உள்ள விசுவாசமானது உறுதிப்பாட்டை வேண்டுகின்றது (லூக். 6:46; யோவா. 14:15). விசுவாசம் மட்டுமே ஒரே வழியாக உள்ளது: "விசுவாச மில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபி. 11:6).

விசுவாசம் என்பது அன்றாடமானதாக உள்ளது. நேற்று நமக்கு அருளப்பட்ட தேவகிருபை இன்று நம்மை நிலைநிறுத்தாது. தேவன் ஒருக்காலும் நாளைக்கு பலத்தைத் தருவதில்லை, அவர் இன்றைக்கு மாத்திரமே பலம் தருகின்றார். வனாந்தரத்தில், மன்னா அன்றாடம் சேகரிக்கப்பட்டது. இரட்சிக்கும் விசுவாசம் உயிருள்ள விசுவாசம் அன்றாட மானதாக உள்ளது. விசுவாசத்தைக் குவித்துச் சேர்த்து வைக்க முடியாது அல்லது சுமந்துகொண்டு செல்ல முடியாது. கிறிஸ்தவ வாழ்வு என்பது எப்போதுமே சுலபமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதில்லை. இது பலவீனமானவர்களுக்கானது அல்ல. நாம், கலக்கம் அடைந்த தந்தையைப் போல, "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, எனது அவிசுவாசம் நீங்க உதவி செய்யும்" (மாற். 9:23, 24) என்று கதறுகின்றோம். நாம், "என்ன நடந்தாலும், தேவனே நான் உம்முடையவன்!" என்று கூறுகின்றோம்.

*வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

"... மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே
விசுவாசத்தைக் காண்பாரோ?" (லூக். 18:8).

---

குறிப்பு

[1]விசேஷமாக, வசனங்கள் 1, 4, 5, 6, 7, 8, 10, 11, 13, 16, 17-19, 23-28, 31, 32, 33, 37, 38, 40 ஆகியவற்றைக் காணவும்.